**STARTING TIME 12.14 P.M**

**IN THE COURT OF SPECIAL SUBORDINATE JUDGE (LAOP), ARAKKONAM.**

**O.S. No. 121/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Gr. II Bench Clerk of this court, on 24.10.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஜெயந்தி** | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

**1. வா.சா.ஆ–28 சான்றினை யார் வாங்கியது என்றால், எனது அம்மா வாங்கினார். என்ன காரணத்திற்காக வாங்கினார் என்றால், ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டையில் எனது தகப்பனார் பெயர் தட்சணாமூர்த்தி என்றும், வாக்காளர் அட்டையில் தசரதன் என்றும் இருந்ததால், இரண்டு பெயரும் ஒன்று என்பதற்காக வேண்டி அந்த சான்றினை வாங்கினார். அதுபோல் வா.சா.ஆ–28 சான்றில் ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டையில் உள்ள தட்சணாமூர்த்தி என்ற பெயரும், வாக்காளர் அட்டையில் உள்ள தசரதன் என்ற பெயரும் ஒன்றே என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.**

**2. வா.சா.ஆ–28 ல் பெறுநர் என எனது அம்மா பெயர் சொல்லவில்லை என்றால், சரிதான், ஆனால் மேலே எனது தாயார் பெயர் உள்ளது. வா.சா.ஆ–28**

சான்றை எந்த தேதியில் வாங்கப்பட்டது என்றால் 2006ம் ஆண்டு வாங்கப்பட்டது. வா.சா.ஆ–28 சான்று வாங்கிய பிறகு இன்றைய தேதி வரை எனது தகப்பனார் பெயர் மற்ற ஆவணங்களில் உள்ளதா என்றால், இறப்பு சான்றிலும், எனது பெயரில் எழுதி கொடுத்த ஆவணத்திலும் என் தகப்பனார் பெயர் R.K. தசரதன் என்கிற தட்சிணாமூர்த்தி என்று உள்ளது. மேற்படி ஆவணங்கள் எந்த ஆண்டிற்குண்டானது என்றால், என் பெயரில் எழுதி கொடுத்த ஆவணம் 2017ம் ஆண்டிற்கானது, 2018ம் ஆனது என் தகப்பனார் காலமானார், அந்த இறப்பு சான்றிலும் உள்ளது.

3. வா.சா.ஆ–28 சான்று வாங்கிய 2006–ம் ஆண்டிலிருந்து, என் பெயரில் ஆவணம் எழுதி கொடுத்ததாக சொல்லும் 2017ம் ஆண்டு வரையிலான காலத்திற்குள் என் தகப்பனார் பெயர் R.K. தசரதன் என்கிற தட்சிணாமூர்த்தி என்று எந்த ஆவணத்திலாவது உள்ளதா என்றால் இல்லை.

4. 1983ம் ஆண்டிலிருந்து 2017ம் ஆண்டுக்கு முன்பு வரை எனது தகப்பனார் மனநிலை சரியில்லாமல் இருந்ததாக சொல்வதால், அதற்கு இடைபட்ட காலத்தில் எனது தகப்பனார் பெயர் R.K. தசரதன் என்கிற தட்சிணாமூர்த்தி என்று இருந்ததற்கான ஆவணம் உள்ளதா என்றால் வா.சா.ஆ–28 ஆவணம் தவிர வேறு எதுவும் இல்லை.

5. வா.சா.ஆ–28 சான்றில் கதவு எண்.29/7, முனிசாமி பிள்ளை தெரு, விருபில்ஸ் பேட்டை என்ற விலாசத்தில் என் தகப்பனார் வசித்து வந்ததாக உள்ளது என்றால் சரிதான். அந்த பகுதியில் தசரதன் என்ற பெயரில் என் தகப்பனார் மட்டும் தான் இருந்தாரா என்றால் அதுபற்றி தெரியாது. எனது தயார் பெயர் ராஜேஸ்வரி என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ–27 ஆவணம் என் தகப்பனாரின் வாக்காளர் அடையாள அட்டை 1995ம் ஆண்டு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் என் தகப்பனாரின்

வயது 40 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ–26 ஆன ஆதார் அட்டை 2013ம் ஆண்டு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆதார் அட்டையில் என் தகப்பனாரின் இரண்டு பெயர்களும் சேர்ந்து இல்லை என்றால் சரிதான், ஆனால் போட்டோ ஒன்றுதான்.

7. 21.04.1995 அன்று R.K.தசரதன் என்பவர் அரக்கோணம் கூட்டுறவு நகர வங்கிக்கு ஒரு அடமான பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. அந்த ஆவணத்தில் எனது தாயார் ராஜேஸ்வரியும் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது.

8. அதேபோல், கடந்த 19.03.2002 தேதியிலும் எனது தகப்பனார் ஆவண எண் 242/2002 என்ற எண்ணில் அரக்கோணம் கூட்டுறவு நகர வங்கிக்கு ஒரு அடமான பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. அந்த ஆவணத்திலும் எனது தாயார் ராஜேஸ்வரியும் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது.

9. சண்முக சுந்தரம் என்பவர் யார் என்றால் எனது சகோதரர் ஆவார். கடந்த 26.06.2006 அன்று எனது தகப்பனார் மற்றும் சகோதரர் சண்முக சுந்தரம் ஆவண எண் 1028/2006 என்ற எண்ணில் அரக்கோணம் கூட்டுறவு நகர வங்கிக்கு ஒரு அடமான பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. அந்த ஆவணத்திலும் எனது தாயார் ராஜேஸ்வரியும் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது.

10. தட்சணாமூர்த்தி என்கிற தசரதன் என்ற பெயர் எனது தகப்பனாரின் பெயர் என்று நான் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1973ம் ஆண்டு என் தகப்பானருக்கும் அவரது சகோதரருக்கும் இடையே எழுதப்பட்ட பாகபிரிவினை பத்திரத்தில் இருந்து இறுதியாக 2006ம் ஆண்டு எழுதி கொடுத்த அடமான பத்திரம் வரை அனைத்து ஆவணங்களிலும் எனது

தகப்பனார் பெயர் தசரதன் என்று தான் உள்ளது என்றும், மாறாக தசரதன் என்கிற தட்சிணாமூர்த்தி என்று இல்லை என்றால் சரியல்ல.

11. 2017 ம் ஆண்டு எழுதப்பட்டதாக சொல்லும் பொது அதிகார பத்திரம் மற்றும் உயில் சாசனத்திலும், இறப்பு சான்றிலும் என் தகப்பனார் பெயர் தசரதன் என்கிற தட்சணாமூர்த்தி என்று வழக்கிற்காக தயாரித்தது என்றால் சரியல்ல, அரசாங்கம் கொடுத்த சான்றில் அதுபோல் இரண்டு பெயரும் உள்ளது. அரசாங்கம் கொடுத்த சான்றில் உள்ளவாறு என் தகப்பனாருக்கு இரண்டு பெயர் உள்ளதாக அந்த பொது அதிகார மற்றும் உயில் சாசனத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி நினைவில்லை. அதுபோன்று ஆவணங்களில் இல்லை என்றால் சரியல்ல.

12. 1973 ம் ஆண்டின் பாகப்பிரிவினை பத்திரத்திலிருந்து 2006 ம் ஆண்டு அடமான பத்திரம் வரை என் தகப்பனார் ஆங்கிலத்தில் தான் கையெழுத்து செய்வார் என்றால் தமிழிலும் செய்வார், ஆங்கிலத்திலும் செய்வார், அடமான பத்திரத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என் தகப்பனார் மனநிலை சரியில்லாமல் இருந்து வந்தார் என்று சொல்லும் நிலையில், கடைசியாக எழுதியாத சொல்லும் ஆவணங்களில் நாங்களாகவே தமிழில் கையெழுத்து செய்து ஆவணங்களை தயாரித்தோம் என்றால் சரியல்ல.

என் பெயரில் எழுதி கொடுத்ததாக சொல்லும் ஆவணங்களில் என் தகப்பனார் தமிழிலும், ஆங்கிலத்திலும் கையெழுத்து செய்வார் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டதா என்றால் அதுபற்றி நினைவில்லை. பிரதிவாதிகள் அனுபவத்திலுள்ள தாவா சொத்தை அபகரிக்க வேண்டி எனது தகப்பனார் எழுதி கொடுத்ததாக பொய்யாக ஆவணங்களை தயாரித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நான் கேட்டுள்ள பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதால் தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால்

**சரியல்ல.**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.**

**ENDING TIME 12.50 P.M**

(Sd/.G.Yuvaraj)
Special Subordinate Judge,
Arakkonam.